DINAKARAN

29 NOV 2022

PAGE 15

## கலை, அறிவியல் கல்லூரிகளில்

# பட்டப்படிப்பை முடிக்க தவறிய மாணவர்கள் மீண்டும் பல்கலைக்கழக தேர்வு எழுத வாய்ப்பு

புதுச்சேரி, நவ. 29: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளாக உள்ள அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் சதானந்த் சுவாமி அனுப்பியுள்ள சுற்றிக்கையில் கூறியிருப்பதாவது:

2006-2007 முதல் 2015-16 வரையிலான கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்டவர்கள், விதிமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச காலத்திற்குள் படிப்புகளை முடிக்க முடியாதவர்கள், அவர்களின் நிலுவைத் தாள்களுக்கு எழுதி, பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிக்காதவர்கள், 2022ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 2023ம் ஆண்டு ஏப்ரல், மே ஆகிய அமர்வுகளில் நடத்தப்படும் தேர்வுகளை எழுத இணைப்பு கல்லூரிகளின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் இரண்டு கூடுதல் வாய்ப்புகளை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2022 நவம்பர், டிசம்பர் மற்றும் 2023 ஏப்ரல், மே அமர்வுகளுக்கான தேர்வின் அறிவிப்பு உரிய நேரத்தில் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வுக்கான அறிவிப்பு வெளியான பிறகு ஆன்லைன் பதிவு துவங்கும். மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவு மற்றும் பாடத்திட்ட அட்டவணைக்கான புதுப்பிப்புகளை அவ்வப்போது பார்க்க வேண்டும்.

கல்லூரிகள் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சல், கடிதம் மற்றும் சுற்றறிக்கை போன்றவற்றின் மூலம் இத்தகவலை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும் மாணவர்கள் பட்டப்படிப்பை முடிப்பதற்கு உதவும் வகையில் பல்கலைக்கழகம் வழங்கிய கூடுதல் வாய்ப்புகளைப் பற்றி பரவலாக விளம்பரம் செய்யவும்.

தேர்வுக்கு பதிவு செய்யும் மாணவர்கள் பதிவு கட்டணமாக ரூ.3,000 மற்றும் ஒவ்வொரு எழுத்து தேர்வு தாள்களுக்கான கட்டணமாக ரூ.1000 செலுத்த வேண்டும். மேலும், வாய்ப்பை பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலை, நிலுவைத் ள் விவரங்களுடன் சேகரித்து, இம்மாத இறுதிக்குள், தேர்வுகளை திட்டமிட்டு, சுமூகமாக நடத்த, பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

THE HINDU TAMIL

29 NOV 2022

PAGE 3

## புதுவை பல்கலைக்கழகத்தில்

# பிஎச்டி சேர காலக்கெடு நீட்டிப்பு

● புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம், பல்வேறு பிஎச்டி படிப்பில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதியை நீட்டித்துள்ளது.

நுழைவுத் தேர்வு விலக்கு பெற்ற பிரிவினருக்கு மட்டும், 30.11.2022 வரை காலக்கெடுநீட்டிக் கப்பட்டுள்ளது. இதன்படி பிஎச்டி படிப்பில் சேர்க்கை பெற விரும்புபவர்கள், "https://www.pondiuni.edu.in admissions-2022-23/." என்ற இணையத்தில் விண்ணப்பிக்கலாம். பல்கலைக் கழகத்தில் 947 இடங்கள் உள்ளன என்று பல் கலைக்கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAMANI

29 NOV 2022

PAGE 3

# புதுவை பல்கலை.யில் பிஎச்.டி. படிப்புக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

**புதுச்சேரி, நவ.28:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் பிஎச்.டி. முனைவர் படிப்புக்கான விண்ணப்பங்களை அளிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது.

இதுகுறித்து பல்கலைக்கழக நிர்வாகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுவை பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. படிப்பில் சேருவதற்காக இணையவழியில் விண்ணப்பிக்க கடைசி தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில், புதன்கிழமை வரை (நவ.30) வரை விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல்களைப் பார்க்கவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

DINAKARAN

29 NOV 2022

PAGE 14

# பிஎச்டி படிப்புக்கு விண்ணப்பிக்க தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, நவ. 29: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிஎச்டி படிப்புக்கு நுழைவு தேர்வு விலக்கு பெற்ற பிரிவினரிடமிருந்து, ஆன்லைனில் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நாளை (30ம் தேதி) வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. படிப்புகளுக்கான தகுதி அளவுகோல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை பார்க்கவும்.

சமீபத்திய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINATHANTHI

29 NOV 2022

PAGE 12

### 2006 முதல் 2016-ம் ஆண்டு வரை

# தேர்ச்சி பெறாத கல்லூரி மாணவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு

புதுச்சேரி, நவ.29-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளாக உள்ள அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் சதானந்த் சுவாமி அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் 2006-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரை படித்து தேர்ச்சி பெறாத கலை அறிவியல் பாடப்பிரிவு இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள், 2022-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 2023-ம் ஆண்டு ஏப்ரல், மே ஆகிய செமஸ்டர்களில் தேர்வு எழுத கூடுதலாக 2 வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட செமஸ்டர் தேர்வின் அறிவிப்பு உரிய நேரத்தில் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். அதன் பிறகு ஆன்லைன் பதிவு தொடங்கப்படும். மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவு மற்றும் பாடத்திட்ட அட்டவணைக்கான புதுப்பிப்புகளை அவ்வப்போது பார்க்க வேண்டும்.

தேர்வுக்கு பதிவு செய்யும் மாணவர்கள் பதிவு கட்டணமாக ரூ.3 ஆயிரம் மற்றும் ஒவ்வொரு எழுத்து தேர்வு தாள்களுக்கான கட்டணமாக ரூ.1000 செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் நிலுவைத்தாள் (அரியர் பாடங்கள்) விவரங்களுடன் இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

DINAKARAN

29 NOV 2022

PAGE 5

# PONDICHERRY UNIVERSITY

## TENDER NOTICE

**RFP towards Conducting EntranceExamination for Ph.D. Admissions 2022-2023 to Pondicherry University using Computer Based Testing(CBT)Methods**

Pondicherry University invites online tenders through Central Public Procurement Portal (CPPP) vide Tender Ref.No. PU/AS-AD/ACA-11/2022-23/115 dated 23/11/2022 **(Tender ID: 2022_PU_722783_1)** from reputed vendors / service providers for RFP towards Conducting Entrance Examination for Ph.D. Admissions to Pondicherry University using Computer Based Testing (CBT) Methods.

For details of specifications, requirements and for any updates, etc., visit https://eprocure.gov.in/eprocure/app

**Last date for submission of Tender: 07.12.2022 (Wednesday) by 3:00 PM**

**Date: 24.11.2022** **REGISTRAR (i/c)**